## பட்ஜெட்டில் தமிழ்நாட்டைப் பழிவாங்கிய பா.ஜ.க.வுக்குப் பதிலடி!

# இது கண்டனப் பொதுக்கூட்டம் மட்டும் அல்ல... 2026-ல் பா.ஜ.க.வையும், அ.தி.மு.க.வையும் வீழ்த்த சபதம் ஏற்கும் கூட்டம்!

## மாதவரத்தில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

மாதவரம்,பிப்.10-

**சென்னை மாதவரத்தில், `தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்' நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியைக் கண்டித்து, ஒன்றிய பாசிச மோடி அரசைக் கண்டித்து, இன்றைக்கு செங்குன்றத்தில் நடைபெறுகின்ற இந்த பிரம்மாண்டம் கண்டன பொதுக்கூட்டத்தில் கண்டன உரை ஆற்றுகின்ற வாய்ப்பை பெற்றதில் மிகுந்த பெருமையடைகிறேன்.

### மாபெரும் வெற்றி

இந்த வாய்ப்பை எனக்கு அளித்த கழகத் தலைவர் அவர்களுக்கும், தலைமைக் கழகத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அறிவிக்கப்பட்ட குறுகிய நேரத்தில் இவ்வளவு சிறப்பாக இவ்வளவு எழுச்சியோடு இந்தப் பிரம்மாண்ட கண்டன பொதுக்கூட்டத்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்க கூடிய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் சுதர்சனம் அவர்களுக்கும், மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மிக மிக முக்கியமான நாளில் இந்த கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் கழகம் இன்றைக்கு மாபெரும் வெற்றியைப் பெற்று இருக்கிறது.

### 90 ஆயிரம் வாக்குகள் வித்தியாசம்

கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 15 ஆயிரம் வாக்குகள் பெற்று 90 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் நம் கழக வேட்பாளர் அண்ணன் சந்திரகுமார் அவர்கள் மிகப்பெரிய வெற்றியைப் பெற்று இருக்கிறார். இந்த வெற்றியுடன் இன்றைக்கு இந்தக் கூட்டத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஒன்றிய அரசின் பட்ஜெட், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எந்த அளவிற்கு ஒரு பயனற்ற, பழி வாங்குகின்ற பட்ஜெட் என்பதை அறிவீர்கள். இன்னும் சொல்லப்போனால், ஆங்கிலத்தில் சொல்வதென்றால் `ஒரு யூஸ்லெஸ் பட்ஜெட்' என்று சொல்வார்கள்.

### ஒரு திட்டம் கூட நமக்கு இல்லை

அப்படிப்பட்ட ஒரு பட்ஜெட்டை ஒன்றிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் பாராளுமன்றத்தில் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் 20 நிமிடம் அந்த பட்ஜெட்டை வாசித்து இருக்கிறார்கள். அதில் பார்த்தீர்கள் என்றால், தமிழ்நாட்டிற்கு என்று ஒரு திட்டத்தைக் கூட அவர்கள் அறிவிக்கவில்லை. தமிழ்நாட்டிற்கு திட்டத்தை தான் அறிவிக்கவில்லை என்று பார்த்தால் தமிழ்நாடு என்ற வார்த்தையை கூட அவர்கள் ஒரு தடவை கூட பயன்படுத்தவில்லை.

அந்த அளவிற்கு, தமிழ்நாட்டின் மேல் ஒன்றிய அரசிற்கு பாசம். வருகின்ற நவம்பர் மாதத்தில் சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்க இருக்கின்ற பீகார் மாநிலத்திற்கு அள்ளி அள்ளி கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் பீகார் போன்ற மற்ற மாநிலங்களுக்கு எந்த நிதியும் ஒதுக்க கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், அங்கு தேர்தல் வர இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக அதை மனதில் வைத்துக்கொண்டு, அந்த மாநிலத்திற்கு நிதியை ஒதுக்கி இருக்கிறார்கள்.

பீகார் மாநிலத்திற்கு மட்டும் கோடிக்கணக்கில் நிதியை ஒதுக்கி இருக்கிறார்கள். பீகார் மாநிலத்தில், `மேற்கு கோசி கால்வாய்' என்ற பகுதியில், கால்வாய் மேம்பாட்டிற்கு என்று கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கி உள்ளார்கள். விவசாயிகளுக்கு `மக்னா போர்ட்' என்ற ஒரு தனி வாரியம் அமைத்து இருக்கிறார்கள்.

### தமிழ்நாட்டிற்கு ஒரு பைசா கூட ஒதுக்கவில்லை

உணவு தேசிய உணவு பதப்படுத்தும் ஆலைகளை அறிவித்து இருக்கிறார்கள். பாட்னாவில் இருக்கின்ற ஐ.ஐ.டி. வளாகம் அதை விரிவாக்கம் செய்ய தனிநிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். ஏற்கனவே, பீகார் மாநிலத்தில் விமான நிலையம் இருக்கிறது. புதிதாக



இரண்டு விமான நிலையத்திற்கான அறிவிப்பு வந்து இருக்கிறது. அது மட்டுமல்ல, ஏற்கனவே இருக்கின்ற விமான நிலையத்தையும் விரிவாக்கம் செய்வதற்கான அறிவிப்பையும் நிதியையும் ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். இது தவிர, `ஸ்கில் டெவலப்மெண்ட் இன்ஸ்ட்டியூட்' அறிவித்து இருக்கிறார்கள்.

சுற்றுலா துறைக்கு என்று தனி நிதியை ஒதுக்கி இருக்கிறார்கள். இவ்வளவு திட்டங்களை பீகாருக்கு வாரி வாரி கொடுத்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டிற்கு ஒரு பைசா கூட ஒன்றிய அரசு ஒதுக்கவில்லை.

### பா.ஜ.க.வின் வரலாறு அப்படி

மக்களுக்கு நன்மை செய்வதற்காக போடப்பட்ட பட்ஜெட் என்று நாம் நினைக்கக் கூடாது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் திட்டம் என்னவென்றால், பீகார் மாநிலத்தில் தன்னுடன் இருக்கின்ற நிதிஷ்குமாரின் கூட்டணியை, என்றைக்காவது உடைத்து விட்டு, அவரின் காலை வாரிவிட்டு, அங்கு ஆட்சியை அமைக்க வேண்டும் என்ற ஒரே திட்டத்துடன் போட்டிருக்கின்ற பட்ஜெட் இதுதான். ஏனென்றால், பா.ஜ.க.வின் வரலாறு அப்படி. தாங்கள் எந்த மாநிலத்திலாவது வளர முடியவில்லை என்றால், அந்த மாநிலத்தில் இருக்கின்ற ஏதாவது ஒரு இயக்கத்தைப் பிடித்து காலை வாரிவிட்டு, அந்த இடத்திற்கு அவர்கள் வந்துவிடுவார்கள்.

அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. நம் தமிழ்நாடு. அப்படித்தான் தமிழ்நாட்டிற்குள் நுழைந்து அ.தி.மு.க.வை காலி செய்து விட்டு, இன்றைக்கு அந்த இடத்தில் பா.ஜ.க. உள்நுழைய முயற்சி செய்துகொண்டிருக்கிறது. பீகார் உள்ளிட்ட பல வட மாநிலங்களில் இருந்து, இங்கு வந்து தொழில் செய்கின்ற தொழிலாளர்களின் குழந்தைகள் நிறைய பேர் இன்றைக்கு தமிழ்நாட்டின் அரசு பள்ளிகளில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். நம் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் அந்தக் குழந்தைகள் தினமும் பயன்பெற்று கொண்டு வருகிறார்கள்.

### நிபந்தனை வைக்கிறார்கள்

தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, வடமாநிலத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் சேர்த்து, கல்விப் பணி செய்கின்ற நம் திராவிட மாடல அரசின் பள்ளிகளுக்கு ஒதுக்க வேண்டிய கிட்டத்தட்ட 2,500 கோடி ரூபாய் நிதியை இன்றைக்கு ஒன்றிய அரசு ஒரு ரூபாய் கூட ஒதுக்கவில்லை. நாமும் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கிறோம். ஆனால், அந்த நிதியை ஒதுக்க வேண்டும் என்றால், அவர்கள் ஒரு நிபந்தனை வைக்கிறார்கள்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வருகின்ற புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒரு கட்டளை போடுகிறார்கள். இந்தப் புதிய கல்விக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்லிவிட்டோம். அதற்கு என்ன காரணம்? புதிய கல்விக் கொள்கையில் என்ன வருகிறது. மீண்டும் `மும்மொழிக் கொள்கை' என்ற பெயரில், இந்தி மொழியை தமிழ்நாட்டிற்குள் திணிக்க முயற்சி செய்கிறார்கள்.

### குலக்கல்வி திட்டம்

அதுமட்டுமல்ல, விஸ்வகர்மா என்ற திட்டத்தை கொண்டுவருகிறார்கள். விஸ்வகர்மா திட்டம் வேறு ஒன்றும் இல்லை. குலக்கல்வி திட்டத்தைத்தான், மீண்டும் பெயரை மாற்றி `விஸ்வகர்மா திட்டம்' என்று தமிழ்நாட்டிற்குள் நுழைக்கப் பார்க்கிறார்கள். இப்போது

தேவையான நிதியை தமிழ்நாடு அரசே தரும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் துணிச்சலுடன்அறிவித்து இருக்கிறார். எவ்வளவு ஏழ்மையான நிலையிலும், பண நெருக்கடி இருந்தாலும், குழந்தைகளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்பதுதான் தமிழ்நாட்டில் இருக்கின்ற பெற்றோர்களின் ஒரே கனவாக இருக்க முடியும். அந்தக் கனவை நிறைவேற்றுகின்ற பணியைத்தான் நம் முதலமைச்சர் அவர்கள், நம் திராவிட மாடல் அரசு செய்து கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஃபெஞ்சல் புயலால் தமிழ்நாட்டின் பல மாவட்டங்கள் சென்னை, விழுப்புரம், கடலூர், கிருஷ்ணகிரி என பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. சென்ற ஆண்டுக்கு முதல் ஆண்டு 2023-ஆம் ஆண்டு மிக்ஜாம் புயலால் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன.

**ஒன்றிய அரசு நீங்கள் எங்களுக்கு நிதி தரவில்லை என்றாலும், பரவாயில்லை புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்க முடியாது என்று, நம் முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்.**

நம் பள்ளிகளில் பொதுத்தேர்வு நடத்துகிறோம். பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத் தேர்வு நடத்துகிறோம். பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்குப் பொதுத் தேர்வு நடத்துகிறோம்.

இந்தப் புதிய கல்விக் கொள்கை வந்து, ஏற்றுக் கொண்டோம் என்றால் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்குப் பொதுத்தேர்வு நடக்கும். அதேபோல் எட்டாம் வகுப்பிற்கு பொதுத் தேர்வு நடக்கும். நம் தமிழக அரசு அதிகமாக மாணவர்கள் படித்து மேற்படிப்பிற்கு செல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். ஐந்தாம் வகுப்பிலும், எட்டாம் வகுப்பிலும் பொதுத் தேர்வு வைத்து தோல்வி அடைகின்ற மாணவன் மேற்படிப்பு படிக்க முயற்சி செய்வானா? எனவே தான் நம் தலைவர் அவர்கள் உறுதியாகச் சொல்லிவிட்டார்கள். ஒன்றிய அரசு நீங்கள் எங்களுக்கு நிதி தரவில்லை என்றாலும், பரவாயில்லை புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்க முடியாது என்று, நம் முதலமைச்சர் அவர்கள் தெளிவாக சொல்லிவிட்டார்.

### முதலமைச்சரின் துணிச்சல்

சொன்னது மட்டுமல்ல, நம் பள்ளிகளுக்கு

### மாற்றான் தாய் மனப்பான்மை

சென்ற ஃபெஞ்சல் புயலுக்கு முதலமைச்சர் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார். வெள்ள நிவாரண பணிகளுக்காக 6,625 கோடி ரூபாயை எங்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைத்தார். மக்களுக்கு பெரிய பாதிப்பு. ஆனால், நம் ஒன்றிய அரசு திருப்பிக் கொடுத்தது எவ்வளவு? வெறும் 944 கோடி ரூபாய்.

கடந்தாண்டு மட்டுமல்ல, அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் இதே நிலைமைதான். இப்படித் தொடர்ந்து நம் தமிழ்நாடு அரசை, தமிழ்நாட்டு மக்களை ஒன்றிய அரசு புறக்கணித்துக் கொண்டு வருகிறது. ஒன்றிய அரசின் இந்த மாற்றான் தாய் மனப்பான்மையைக் கண்டித்து, அதை மக்களிடம் கொண்டு சென்று விளக்கி சொல்வதற்காகத்தான் இன்றைக்கு தமிழ்நாடு முழுக்க, நம் திராவிட முன்னேற்ற கழகம் தொடர்ந்து, இதே மாதிரியான கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறது.

நம் தலைவர் அவர்கள் ஆவடியில், இதே மாதிரியான ஒரு கண்டனக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, ஒன்றிய பா.ஜ.க. அரசின் `ஆஸ்தான அடிமை' எடப்பாடி பழனிச்சாமி அவர்களால் கூட ஆதரிக்க முடியாத அளவிற்கு, ஒரு குற்றப் பட்ஜெட்டை ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் தாக்கல் செய்து இருக்கிறார். அப்படி என்றால், அது எவ்வளவு மோசமான பட்ஜெட் என்பதை நீங்களே புரிந்து கொள்ளவேண்டும்.

### மாயாஜால பட்ஜெட்

பட்ஜெட் தாக்கல் செய்த பிறகு பத்திரிக்கையாளர்கள் எடப்பாடி பழனிச்சாமியிடம் சென்று, இந்த பட்ஜெட்டை பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் என்ன தெரியுமா சொன்னார். இது ஒரு மாயாஜால பட்ஜெட். எங்கேயாவது கேள்விப்பட்டு இருக்கிறீர்களா இது மாதிரியான வார்த்தையை. இது பாராட்டு என்று நினைத்துக் கொள்வதா. இல்லை வஞ்சப்புகழ்ச்சி என்று எடுத்துக் கொள்வதா. இந்த பட்ஜெட்டைப் பாராட்டி நல்லா இருக்கிறது என்று சொன்னால், மக்கள் கோபப்படுவார்கள். நன்றாக இல்லை என்று சொன்னால், ஒன்றிய அரசு ரெய்டு விட்டுவிடும். அதனால்தான் பாதுகாப்பாக என்ன சொல்கிறார் இது ஒரு மாயாஜால பட்ஜெட். இதை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டிற்கு எவ்வளவு திட்டம் இருக்கிறது. நிதி ஒதுக்கச் சொல்லி, நம் முதலமைச்சர் அவர்கள் எத்தனையோ முறை கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்கு ஒன்றிற்கு கூட இதுவரைக்கும் நிதி ஒதுக்கவில்லை.

### தமிழ்நாடுதான் 2-வது இடம்

தேசிய நெடுஞ்சாலைகள், ரயில்வே திட்டங்கள், சென்னை கோவை மெட்ரோ ரயில் திட்டங்கள் இப்படி இதுபற்றிய எந்த ஒரு அறிவிப்பும்கூட ஒன்றிய அரசின் நிதி பட்ஜெட்டில் அறிவிக்கவில்லை. இவ்வளவுக்கும் நம் தமிழ்நாடு இந்தியாவின் வளர்ச்சிக்கு, இந்தியாவின் கிராஸ் டொமெஸ்டிக் புரொடக்ஷன் இன்று இந்தியாவில் இருக்கின்ற 28 மாநிலங்களில் நம் தமிழ்நாடு தான் இரண்டாவது இடம். அதாவது இந்தியாவின் வளர்ச்சிக்கு பங்கு செலுத்துவதில் நம் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. அப்படிப்பட்ட நம் தமிழ்நாட்டையே வஞ்சித்து இருக்கிறது ஒன்றிய பாஜக அரசு.

அதுமட்டுமல்ல 2014-15 நிதி ஆண்டு முதல் 2022-23 நிதியாண்டு வரை கடந்த எட்டு வருடங்களில் வருமான வரி நேரடியாக ஒன்றிய அரசுக்கு செலுத்தி இருக்கின்ற தொகை எவ்வளவு தெரியுமா. ஆறு லட்சத்து 23 ஆயிரம் கோடி ரூபாயை ஒன்றிய அரசுக்கு நாம் வரிப்பணமாகக் கட்டியிருக்கிறோம். ஆனால், தமிழ்நாடு அரசிற்கு ஒன்றிய அரசு திருப்பி எவ்வளவு தெரியுமா கொடுத்திருக்கிறது. வரி பகிர்வு வெறும் 58 ஆயிரம் கோடி. நாம் கொடுத்தது ஆறு லட்சத்து 23 ஆயிரம் கோடி, நமக்கு திருப்பி வந்தது, வெறும் 58 ஆயிரம் கோடி.

அதே வேளையில், நீங்கள் உத்தரபிரதேசம் மாநிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு இரண்டு லட்சத்து 58 ஆயிரம் கோடியை ஒன்றிய அரசு கொடுத்து இருக்கிறது. இதை ஒன்றிய அரசின் தன்னாட்சி அமைப்பான `நிதி ஆயோக் அமைப்பு' ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாநிலமாகப் பயணம் செய்து கணக்கு எடுப்பார்கள்.

### முதல் மாநிலமாக சாதனை

நிதி ஆயோக் என்ற அமைப்பு, எந்த மாநில அரசு, எந்தெந்தத் திட்டங்களுக்கு எவ்வளவு செலவு செய்திருக்கிறது. அதனால், மக்களுக்கு எவ்வளவு பயன்பாடு என்று கணக்கெடுக்கும். அதில் எந்த மாநிலம் சிறந்து விளங்குகிறது என்று ஒரு செய்தியைத் தாக்கல் செய்வார்கள். ஒன்றிய அரசின் நிதி அமைச்சகம் சார்பாக, ஒவ்வொரு மாதமும் பொருளாதார ஆய்வறிக்கை சமர்ப்பிக்கும். இந்த இரண்டு அறிக்கையிலும்,

தொடர்ச்சி 7 – ஆம் பக்கம்